# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:136 ★16.09.2026 ★தமிழ் நாளிதழ் ★புதன்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:136 ★16.09.2026 ★TamilDaily ★Wednesday ★Page-4 ★Price-₹5/- Chennai








## பால் கொள்முதல் நிலையத்தில் நடைபெறும் முறைகேடு நடவடிக்கை எடுக்கப்படுமா? மாவட்ட நிர்வாகம் பொது மக்களின் எதிர்பார்ப்பு..

ராணிப்பேட்டை,செப்.16

ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் தமிழக அரசால் இயக்கப்பட்டு வருகின்றது. இந்த கூட்டுறவு பால் உற்பத்திசங்கத்தில்சோளிங்கர்சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து சுமார் 60க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து 3000 மேற்பட்ட பொது மக்கள் தங்களது பசு மாடுகளை மேய்ச்சலுக்கு விடப்பட்டு காலை மற்றும் மாலை இருவேளையும் பால் கறக்கப்பட்டு சோளிங்கர்பால்கூட்டுறவு நிலையத்திற்கு தினம்தோறும் வழங்கப்பட்டு வருகின்றன.60 கிராமங்களில் இருந்து கறக்கப்படும் பால் அதாவது காலை 210 கேன் மாலை 130 கேன் என மொத்தம் 340 கேன் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றனர்.ஒரு கேன் 50 லிட்டர் கொள்ளளவு கொண்டது அதாவது ஒரு நாளைக்கு 16,000 லிட்டர் பால் சோளிங்கர் பால் கூட்டுறவு சங்கத்திற்கு எடுத்து வரப்படுகின்றன.இந்த அலுவலகத்தில் சோளிங்கர் சோமசுந்தரம் பகுதியைச் சேர்ந்த வடிவேல் என்பவர் பால் தரம் ஆய்வு (டெஸ்டிங்) செய்யும் பணியில் கடந்த16 ஆண்டுகளாக பால் உற்பத்தியாளர் சங்கத்தில் வேலை செய்து வருகிறார்.

கடந்த 2025 ம் வருடம் 9வது மாதம் பால் அளவாளராக வேலை செய்து வரும் இவர் தினசரி பால் சொசைட்டிக்கு வரும் வாடிக்கையாளர்களிடமிருந்து கேனில் இருக்கும் பாலை ஆய்வு செய்யும் போது பால் கேன்களில் இருந்து தினசரி 1லிட்டர் முதல் 2 லிட்டர் வரை அதாவது தினசரி காலை மாலை 320 பால் கேன்களில் இருந்து சுமார் 500 லிட்டர் வரை பால் திருட்டுத்தனமாக எடுக்கப்பட்டு வெளியில் உள்ள கடைகளுக்கு விற்பனை செய்து வருகிறார்.ஒரு லிட்டர் 45 ரூபாய் எனில் ஒரு நாளைக்கு சுமார் 500 லிட்டர் பால் வியாபாரம் செய்யும் இவருக்கு ஒருநாள் வருமானம் 22,500, ஆகும். ஒரு மாதத்திற்கு வருமானம் 6,75,000 எனில் ஒரு ஆண்டிற்கு 81,00,000 சம்பாதித்து வருகிறார் என கூட்டுறவு சொசைட்டிக்கு வரும் வாடிக்கையாளர்கள் குற்றச்சாட்டு தெரிவிக்கின்றனர்.

இது மட்டுமில்லாமல் இவருடன் வேலை செய்து வரும் கொண்ட பாளையத்தை சேர்ந்த லோகநாதன் முதல் நிலை எழுத்தர் கூடுதல் (பொறுப்பு ) மேலாளராக சுமார் 16 வருடம் பணியாற்றி வருவது மட்டுமல்லாமல் அவர் உண்டான பொறுப்பை சரியாக செய்வதில்லை என்ற பொதுமக்கள் குற்றம் சாற்றி வருகின்றனர்அது மட்டும் இல்லாமல் லோகநாதன் என்பவருக்கு 70% சதவிகிதம் பார்வை குறைபாடு உள்ளவர் என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர் இவர்கள் இருவரும் செய்து கொண்டு தினமும் பல பகுதிகளில் இருந்து வரும் பால் கேன்களில் பால் மறைமுகமாக எடுக்கப்பட்டு தினந்தோறும் வியாபாரம் செய்யப்பட்டு வருகின்றனர். இவர்கள் செய்யும் அல்ட்ரா சிட்டிக்கு முதல் நிலை ஆய்வாளராக தலைமை அலுவலகத்தில் 16 வருடமாக பணியாற்றி வரும் லதா தற்போது பால் சொசைட்டி இன்சார்ஜராக 1 வருட காலமாக பணி செய்து வருகிறார் லோகநாதன் மற்றும் வடிவேல் மறைமுகமாக பால் திருடப்பட்டு வியாபாரம் செய்து வருவதை பலமுறை லதாவிடம் பொது மக்கள்குற்றம்சாட்டியும் இதனால்வரை கண்டும் காணாமல் இருந்து வருகிறார். சோளிங்கர் பால் உற்பத்தி மையத்தில் மாதம் வருமானமாக ஏழிலிருந்து எட்டு லட்சம் வரை வருமானம் காட்டி வரும் இவர்கள் மறைமுகமாக பால் விற்பனை செய்ததிலிருந்து மாத வருமானம் தற்போது நான்கு லட்சம் கணக்கு காட்டி வருவதாக பால் வியாபாரம் செய்யும் பொதுமக்கள் குற்றம் சாற்றி வருகின்றனர்.

அதாவது இவர்கள் தனிப்பட்ட முறையில் மறைமுகமாக எடுக்கப்படும் பாலில் இருந்து இவர்களுக்கு மாத வருமானமாக சுமார் 5 லட்சம் மேல் தனி வருமானமாக சம்பாதித்து வருவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர் கேன்களில் இருந்து எடுக்கப்படும் பால். பால் குளிரூட்டும் நிலையத்திற்கு லாரி மூலமாக அனுப்பி வைக்கப்பட்டு குறைவாக இருக்கும் பால்கேன்களில் தண்ணீர் ஊற்றி கணக்கு காண்பித்து வருகின்றனர்.

இதுபோன்று ஏமாற்று வேலையில் தினந்தோறும் ஈடுபட்டு வருகின்றனர் சோளிங்கர் பகுதியில் உள்ள பால் உற்பத்தி மையத்தை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து இவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக் கொண்டனர்.

## "அலைக்கழிக்கப்படும் அமைப்புசாரா தொழிலாளர்கள்" நலவாரியத்தின் நிதி எங்கே போகிறது?

தமிழகத்தில் உள்ள லட்சக்கணக்கான அமைப்பு சாரா கட்டுமான தொழிலாளர்களின் நலனை பாதுகாக்கவும், அவர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்கவும் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியம் உருவாக்கப்பட்டது. மாநில அளவில் இயங்கும் இதன் தலைமையகத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (நலன்) அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வாரியத்தின் முதன்மையான நிதி ஆதாரம் அரசாங்கத்தின் நேரடி வரிப்பணம் அல்ல. மாறாக, மாநிலத்தில் நடைபெறும் தனியார் மற்றும் அரசு சார்ந்த அனைத்து பெரிய கட்டிட கட்டுமான பணிகளின் மொத்த மதிப்பீட்டிலிருந்து வசூலிக்கப்படும் 1 சதவீத 'கட்டுமான நல செஸ்' (Cess) வரியே இதன் பிரதான நிதி அமைப்பாகும். இந்த தொகை நேரடியாக நலவாரியத்தின் மைய நிதியகத்திற்கு சென்று, அங்கிருந்து மாவட்ட அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு பிரித்து அனுப்பப்படுகிறது. இந்த நிதியின் முக்கிய நோக்கமே, சொந்த வீடற்ற ஏழை கட்டுமான தொழிலாளர்களுக்கு வீடமைப்பு வசதி ஏற்படுத்தி தருவதாகும். தமிழக அரசின் தொழிலாளர் நலத் துறையின் G.O. Ms. No. 7 (நாள்: 10.01.2022) மற்றும் G.O. Ms. No. 110 (நாள்: 05.12.2022) ஆகிய அரசாணைகளின் கீழ், அடுக்குமாடி குடியிருப்புகளில் வீடு பெற விரும்பி விண்ணப்பிக்கும் தகுதியுள்ள தொழிலாளர்களுக்கு, அவர்கள் செலுத்த வேண்டிய பயனாளி பங்களிப்பு தொகையை ரூ. 4 லட்சம் வரை நலவாரியமே மானியமாக வழங்கும் திட்டம் சட்டப்பூர்வமாக நடைமுறையில் உள்ளது.

ஆனால், கள யதார்த்தம் முற்றிலும் வேறாக இருக்கிறது. தினக்கூலி வேலை செய்து அன்றாட பிழைப்பை நடத்தும் தொழிலாளர்கள், இந்த நிதியுதவியை பெற மனு அளித்தால், "ஜி.ஓ. வரவில்லை", "நிதி ஒதுக்கீடு ஆகவில்லை" போன்ற சாக்குப்போக்குகள் கூறி அதிகாரிகள் அலட்சியப்படுத்துவதாக குற்றச்சாட்டுகள் எழுகின்றன. களப்பணி ஆய்வு என்ற பெயரில் காலம் கடத்துவது, உரிய காரணமின்றி மனுக்களை நிராகரிப்பது, மேல்முறையீடு செய்தாலும் தெளிவான பதிலும் தராமல் அலைக்கழிப்பது என தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை சீரழிக்கும் சூழலே நிலவுகிறது. நாள்தோறும் தங்களின் கூலியை இழந்து நலவாரிய அலுவலகங்களை நோக்கி நடையாய் நடக்கும் தொழிலாளர்களின் வேதனையை கேட்க ஆளில்லை. தொழிலாளர்களின் உழைப்பில் கிடைத்த செஸ் வரிப் பணம் வாரியத்தின் கணக்கில் முடங்கிக்கிடக்கும் போது, உரிய பயனாளிகளுக்கு அது சென்றடைவதை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் உடனடியாக தனி கவனம் செலுத்த வேண்டும். அனைத்து மாவட்ட நலவாரிய அலுவலகங்களுக்கும் சிறப்பு சுற்றறிக்கை அனுப்பி, இதற்கென தனி குழுவை அமைத்து நலவாரியங்கள் முறைப்படி இயங்குகின்றனவா என்பதை நேரில் ஆய்வு செய்ய உத்தரவிட வேண்டும். குறிப்பாக, தேனி மாவட்டத்தில் சமீபகாலமாக இத்தகைய அலைக்கழிப்புகள் அதிகரித்து வருவதாக குற்றச்சாட்டுகள் எழுகின்றன. எனவே, தேனி மாவட்ட ஆட்சியர் அவர்கள் இதில் உடனடியாக தலையிட்டு, நலவாரிய செயல்பாடுகளை சீரமைத்து, நிலுவையில் உள்ள மனுக்களுக்கு குறிப்பிட்ட கால வரம்பிற்குள் தீர்வு காண்பதை உறுதி செய்ய வேண்டும் என பொதுமக்கள், கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அப்போதுதான் உழைக்கும் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மேம்படுவதோடு, அவர்களின் கண்ணீருக்கும் உண்மையான நியாயம் கிடைக்கும்.

## ஓபிசி பிரிவிலும் சாதிவாரி கணக்கெடுப்பு கோரி செப்.17 முதல் பிரச்சார இயக்கம்: தமிழக காங்.

மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது ஓபிசி பிரிவிலும் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வலியுறுத்தி வரும் 17ம் தேதி முதல் பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்படும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார்.

விருதுநகரில் செய்தியாளர்களிடம் பேசிய மாணிக்கம் தாகூர், "சாதிவாரி கணக்கெடுப்பு மற்றும் பெருநிறுவனங்களின் வாராக்கடன்விவரங்களை வெளியிட மோடி அரசு தொடர்ந்து தயங்குவது, ஆதிக்கச் சலுகைகளை பொதுவெளியில் மறைக்கும் அவர்களின் வர்க்க மற்றும் சாதிய இரட்டை வேடத்தையே அம்பலப்படுத்துகிறது.

பாங்க் ஆப் பரோடா போன்ற பொதுத்துறை வங்கிகள்ரூ.35,716கோடி பெருநிறுவனக் கடன்களைத் தள்ளுபடி செய்துள்ளன.

2015லேயே உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தும், இந்த வங்கிகள் வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களின் பெயர்களை வெளியிட மறுக்கின்றன.

இதேபோல், தொகுதி மறுவரையறை காரணங்களுக்காகக் கணக்கெடுப்பைத் தள்ளிப்போட்ட மோடி அரசு, ஓபிசி பிரிவில் இடம்பெற்றுள்ள சாதிகள் குறித்த பட்டியல் இல்லை எனப் பொய் சொல்லி, சாதிவாரி கணக்கெடுப்பை முடக்க 'திறந்த வெளிக் கேள்வி' (Opened question) என்ற சதியை அரங்கேற்றியுள்ளது.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உண்மையான அதிகாரப் பகிர்வு கிடைத்துவிடக் கூடாது என்பதும், உண்மையான ஓபிசி எண்ணிக்கை வெளிவந்துவிடக் கூடாது என்பதும் ஆர்எஸ்எஸ்ஸின் திட்டமிட்ட சதி. ஆர்எஸ்எஸ்ஸின் உள்நோக்கத்தை நிறைவேற்ற, தன்னை பிற்படுத்தப்பட்டவர் என்று சொல்லிக்கொள்ளும் மோடி வெறும் முகமூடியாக இருந்து, அமித் ஷாவுடன் சேர்ந்து இந்த வஞ்சகத்தை அரங்கேற்றுகிறார்.



2ம்கட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பின் தலையாய நோக்கமே சாதி விவரங்களைச் சேகரிப்பது தான். அது சமூகத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மிகச் சிக்கலான விவகாரம் என்பது அனைவரும் அறிந்ததே. எஸ்.சி., எஸ்.டி., பிரிவினருக்கு தெளிவான பட்டியல் இருக்கும் போது, ஓபிசி சாதி விவரங்களை மட்டும் முன்பே வரையறுக்கப்பட்ட பட்டியல் இன்றி 'openended' முறையில் சேகரிப்பது ஏன்?

மத்திய அரசின் பட்டியலிலேயே தமிழ்நாட்டில் மட்டும் 220க்கும் மேற்பட்ட ஓபிசி சாதிகள் இருக்கும்போது, துல்லியமான பட்டியலைத் தராமல் பொதுவான கேள்வியாக வைப்பது மோடிஅரசின்திட்டமிட்ட நாடகம்.

34 லட்சம் கணக்கெடுப்பாளர்கள் ஈடுபடும் ஒரு நடைமுறையில், முன்வரையறுக்கப்பட்ட பட்டியல் எதுவும் இல்லாமல் தவறுகளின் அளவைக் கட்டுப்படுத்திவிடலாம் என நினைப்பது வடிகட்டிய பகல்கனவு.

தெளிவான பட்டியலைத் தவிர்த்துவிட்டு ஒரு குளறுபடியான முறையைக் கையாள்வது மொத்தக் கணக்கெடுப்பையும் படுதோல்வியிலேயே முடிக்கும்.

உண்மையான ஓபிசி எண்ணிக்கையைத் திட்டமிட்டே குறைத்துக்காட்டி, எதிர்காலத்தில் இட ஒதுக்கீட்டையே அடியோடு சிதைத்துவிடும்.

பிற்படுத்தப்பட்ட மக்களை அதிகாரமற்றவர்களாகவே முடக்கி வைக்க வேண்டும் என்பதே ஆர்எஸ்எஸ்ஸின் சித்தாந்தம். ஆர்எஸ்எஸ்ஸின் சமூக நீதி எதிர்ப்பை செயல்படுத்தும் முகமூடிகளாகத்தான் மோடியும், அமித் ஷாவும் இந்த துரோகத்தை அரங்கேற்றுகிறார்கள்.

இதைகண்டித்தும் ஓபிசி சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வலியுறுத்தியும் இம்மாதம் 17ம் தேதி சென்னையில் எனது தலைமையில், அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளரும், தமிழக பொறுப்பாளருமான குலாம் அகமது மிர் முன்னிலையில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் வீரமணி பிரச்சார இயக்கத்தை தொடங்கி வைக்க உள்ளார்" என தெரித்துள்ளார்.

## "கடந்த பத்து ஆண்டுகளாக கொடைக்கானலில் எந்தவித வளர்ச்சியும் இல்லை" அமைச்சர் மரிய வில்சன்

"கொடைக்கானல், கடந்த பத்து ஆண்டுகளாக எந்த வளர்ச்சியும், முன்னேற்றமும் இன்றி அதே நிலையில் தான் உள்ளது" என்று தமிழக நிதி அமைச்சர் மரியவில்சன் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் கடந்த சில தினங்களாக நிதியமைச்சர் மரியவில்சன் தனியார் விடுதியில் தங்கியுள்ளார். முன்னாள் முதல்வர் அண்ணா பிறந்ததினத்தை முன்னிட்டு இன்று (செப்.15) கொடைக்கானல் பிரையண்ட் பூங்கா அருகே மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்க நிதியமைச்சர் மரியவில்சன் சென்றார். அப்போது பூங்கா பூட்டப்பட்டிருந்தது. அங்கிருந்த தவெகவினர் பூங்காவின் பூட்டை உடைக்க முயற்சித்தனர். இதை அமைச்சர், தவறு எனக் கூறி தடுத்தார். இருப்பினும், "முன்னாள் முதல்வர் அண்ணா பிறந்தநாளை ஒட்டி அவரது சிலை உள்ள இடத்தை இரண்டு நாட்களுக்கு முன்பே கொடைக்கானல் நகராட்சி தயார் படுத்தியிருக்க வேண்டாமா? இது மிகவும் மோசமான செயல்.

நான் திண்டுக்கல் அல்லது மதுரை சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்துக் கொள்கிறேன்" என்று கோபமாகக் கூறினார்.

இதன்பின் பூங்கா சாவி கொண்டுவரப்பட்டு பூங்கா திறக்கப்பட அண்ணா சிலைக்கு அமைச்சர் மரியவில்சன் மாலை அணிவித்தார். தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், "கொடைக்கானலில் மருத்துவமனை, சாலை வசதிகள் குறித்து மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அதற்கான ஆய்வுக்குத்தான் வந்தேன். இங்குள்ள மக்கள் சாலை வசதியை பெரிய பிரச்சினையாக சொல்கிறார்கள்.

ஆக்கிரமிப்புக்கள் அதிகம். அதனால்தான் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. பட்டா பிரச்சினைகளையும் சொல்லியுள்ளார்கள். பிரையண்ட் பூங்கா ஊழியர்கள் பணிநிரந்தம் செய்யக் கோரியுள்ளனர்.

இது குறித்து முதல்வரிடம் கூறி நடவடிக்கை எடுப்பேன். கடந்த பத்து ஆண்டுகளாக கொடைக்கானல் வந்து செல்கிறேன்.

ஆனால், இப்பகுதி எந்த முன்னேற்றமும் இல்லாமல் அப்படியே தான் உள்ளது.

கொடைக்கானல் வளர்ச்சி குறித்து தமிழக முதல்வரிடம் தனியாக பேசவுள்ளேன். கேபிள் கார் கொண்டுவருவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். இந்த ஆட்சியில் சொல் மட்டுமல்ல செயலாகவும் அது மாறும்," என்றார்.

# "சின்னமனூரில் விநாயகர் சதுர்த்தி விழா" மலேசிய மகாகுரு பங்கேற்பு

## சிலம்பாட்டத்துடன் கோலாகல தொடக்கம்

தேனி,செப்.16

தேனி மாவட்டம் சின்னமனூர் நகரில் இந்து முன்னணி சார்பில் 41






ஆ ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா கோலாகலமாக தொடங்கியது.

விழாவின் முதல் நாள் நிகழ்வாக, பூலித்தேவன் இலவச சிலம்ப பயிற்சி பள்ளியின் மாணவ, மாணவிகள் பங்கேற்ற பிரமாண்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பூலித்தேவன் இலவச சிலம்ப ஆசான் ரத்தினவேல் பாண்டியனின் ஆசியுடன் மேடையேறிய மாணவ, மாணவியர், சிலம்பத்தில் உள்ள அனைத்து வகையான அடிவரிசைகளையும் அற்புதமாக செய்து காட்டி வீரம் செறிந்த சிலம்பாட்ட பிரிவுகளையும் வரிசையாக சுற்றி வந்த காட்சி பொதுமக்கள் மற்றும் பக்தர்களை பெரிதும் கவர்ந்தது.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந் தினராக மலேசிய சிலம்ப கழகத்தின் நிறுவனரும், முன்னாள் தேசிய தலைமை மகாகுரு அவர்களின் இளைய மகன் மகாகுரு டத்தோ ஆ.சிவக்குமார் தனது குடும்பத்தினருடன் கலந்து கொண்டார். அவருக்கு இந்து முன்னணி பொறுப்பாளர்கள் உற்சாகத்துடன் வரவேற்பு அளித்து கௌரவித்தனர். பின்னர் மேடையில் பேசிய டத்தோ ஆ.சிவக்குமார், சின்னமனூர் நகர் பகுதியில் நடைபெறும் விநாயகர் சதுர்த்தி விழாவின் கோலாகலத்தை காண வேண்டி,தாம் குடும்பத்துடன் வந்திருப்பதாகவும், இந்த பிரமாண்ட நிகழ்வை கண்டு களிப்பது தங்களுக்கு பெரும் ஆனந்தத்தையும் மன நிறைவையும் அளிப்பதாக பூரிப்புடன் தெரிவித்தார். சின்னமனூர் மற்றும் அதனை சுற்றியுள்ள ஏராளமான பொதுமக்களும் பக்தர்களும் திரளாக வந்து இவ்விழாவை கண்டு களித்து சென்றனர்.





தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் காசநோய் முக்த் பாரத் அபியான் (TB Mukt Bharat Abhiyaan) துறைசார்ந்த அலுவலர்களுடனான மாவட்ட அளவிலான குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது.

# இராணிப்பேட்டை மாவட்டத்தில் 64 ஒப்பந்த / தற்காலிக செவிலியர் பணியிடங்கள் விண்ணப்பங்கள் வரவேற்பு

தேசிய நலவாழ்வு குழுமம் தமிழ்நாடு (NHMTN), மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ், இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார




நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள ஒப்பந்த / தற்காலிக செவிலியர் (Staff Nurse) பணியிடங்களில் 64 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. இப்பணியிடங்கள் முற்றிலும் தற்காலிகமானவை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன. இப்பதவிக்கு விண்ணப்பிக்க 50 வயது வரை உள்ளவர்கள் தகுதியுடையவர்கள். அரசு அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற, இந்திய செவிலியர் குழுமத்தால் (Indian Nursing Council) அங்கீகரிக்கப்பட்ட செவிலியர் கல்லூரியில் GNM அல்லது B.Sc. Nursing படித்திருக்க வேண்டும்.

மேலும், தமிழ்நாடு நர்சிங் கவுன்சிலில் செல்லுபடியாகும் பதிவு பெற்றிருப்பது கட்டாயமாகும். இதனுடன், விண்ணப்பதாரர்கள் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பில் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாக பயின்றிருக்க வேண்டும்.

தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் விண்ணப்பப் படிவத்தை இராணிப்பேட்டை மாவட்ட நிர்வாகத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான http//:ranipet.nic.in மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் தேவையான சான்றிதழ்களின் நகல்களை இணைத்து, பதிவுத் தபால் (Registered Post) மூலமாகவோ அல்லது நேரிலோ, மாவட்ட சுகாதார அலுவலகம், 3ஆம் தளம், Bபிளாக், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், இராணிப்பேட்டை 632 403 என்ற முகவரிக்கு 25.09.2026 அன்று மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

காலக்கெடுவிற்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள இக்காலிப்பணியிடங்களுக்கு தகுதியுடையவர்கள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.







# ஆரணியில் தமிழக முன்னாள் முதல்வர் அண்ணா பிறந்தநாள் விழா திமுகவினர் கொண்டாட்டம்

ஆரணி,செப்.16

ஆரணியில் தமிழக முன்னாள் முதல்வர் அண்ணா பிறந்தநாள் விழா திமுகவினர் கொண்டாட்டம்

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் திமுக சார்பில் தமிழக முன்னாள் முதலமைச்சர் அண்ணாவின் 118 வது பிறந்த நாளை முன்னிட்டு ஆரணி அண்ணா சிலை அருகில் அண்ணாவின் திருஉருவ சிலைக்கு ஆரணி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஆர்.சிவானந்தம் தலைமையில் மாலை அணிவித்து பின்னர் அலங்கரிக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஆரணி நகர பொறுப்பாளர் மணிமாறன் ஒன்றிய குழு முன்னாள் துணைத் தலைவர் கே.டி.ராஜேந்திரன் நகர மன்ற முன்னாள் உறுப்பினர்கள் பொன் சேட்டு செந்தில்வேல் மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சமூக நீதிக்காக பாடுபடுவோருக்கு தந்தை பெரியார் விருது: 5 லட்சம் பரிசுத்தொகை, ஒரு சவரன் தங்கப்பதக்கம்

## ஆட்சியர் வந்தனா கார்க் அறிவிப்பு

திருவண்ணாமலை, செப். 15:

சமூக நீதிக்காக பாடுபட்டு, பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் சிறப்பான பங்களிப்பை வழங்கியவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் "சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது" தொடர்பாக திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தகவல் தெரிவித்துள்ளார்.



சமூக நீதிக்காக பாடுபடுபவர்களை சிறப்பிக்கும் வகையில், தமிழக அரசால் 1995ம் ஆண்டு முதல் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது. விருது பெறுபவர்களுக்கு ரூ.5 லட்சம் பரிசுத்தொகை, ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கப்படுகிறது.

விருதாளரை தமிழக முதலமைச்சர் தேர்வு செய்கிறார்.

2026ம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது வழங்குவதற்கான விருதாளரை தேர்வு செய்யும் வகையில், தகுதியானவர்களிடமிருந்து பரிந்துரைகள் மற்றும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

சமூக நீதிக்காக பாடுபட்டு, பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் சிறப்பான பணிகளை மேற்கொண்டு, அதன்மூலம் குறிப்பிடத்தக்க சாதனைகளை புரிந்துள்ளவர்கள் இவ்விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரரின் சுயவிவரம், முழு முகவரி, தொலைபேசி எண், சமூக நீதிக்காக மேற்கொண்ட பணிகள் குறித்த விரிவான விவரங்கள் மற்றும் அதற்கான ஆவணங்கள் ஆகியவற்றை இணைக்க வேண்டும்.

2026ம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருதுக்கான விண்ணப்பங்கள் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியருக்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் அக்டோபர் 20, 2026 ஆகும் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

# வாலாஜாபேட்டையில் அண்ணா பிறந்த நாள் திமுக சார்பில் மரியாதை முன்னாள் அமைச்சர் காந்தி பங்கேற்பு

இராணிப்பேட்டை,செப்.16

இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டையில் தமிழக முன்னாள் முதல்வர் பேரறிஞர் சி.என்.





அண்ணாதுரையின் 118 வது பிறந்த நாள் வாலாஜாபேட்டை நகர கழக திமுக சார்பில் கொண்டாடப்பட்டது

வாவாலாஜா நகர கழக திமுக சார்பில் முன்னாள் அமைச்சர் மாவட்ட செயலாளர் காந்தி தலைமையில் வி.சி .மோட்டூர் ரவுண்டானா, வாலாஜா தினசரி மார்க்கெட் மற்றும் வாலாஜா வட்டார வளர்ச்சி அலுவலகம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது இதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது இதில் மாவட்ட ஒன்றிய குழு தலைவர் சேஷா வெங்கட்ரமணன் நகர செயலாளர் தில்லை மாவட்ட கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## செய்யாறு நகர அதிமுக சார்பில்

# அண்ணாவின் 118 வது பிறந்த நாள் விழா சட்டமன்ற உறுப்பினர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்

செய்யாறு,செப்.16

செய்யாறு நகர அதிமுக சார்பில் அண்ணாவின் 118 வது பிறந்த நாள் விழா சட்டமன்ற உறுப்பினர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு நகர அதிமுக சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 118 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சட்டமன்ற அலுவலகம் முன்பு திருவண்ணாமலை வடக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான முக்கூர் என். சுப்பிரமணியன் அலங்கரிக்கப்பட்ட அண்ணாவின் உருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி பின்னர் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில் அதிமுக நகர செயலாளர் கே.வெங்கடேசன், ஒன்றிய செயலாளர்கள் அரங்கநாதன், மகேந்திரன், துரை, சிவராஜ், நகர அவைத்தலைவர் ஜனார்த்தனன், மாவட்ட நிர்வாகிகள் அருணகிரி, ரவிச்சந்திரன், மெய்யப்பன், முனுசாமி, கோபால், தசரதன், கோவிந்தராஜ், இளைய ராஜா, பாபு, அரவிந்த், செந்தில், தணிகாசலம், சுரேஷ், சுரேஷ்குமார், ரமண முருகன், செபாஸ்டின் துரை, சுதாகர், துளசிராமன், அபிராமி சுரேஷ், பெயிண்டர் ராஜ், ரவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



செய்யாறில் சட்டமன்ற அலுவலக வாயலில் நகர அதிமுக சார்பில் அண்ணாவின் 118 வது பிறந்த நாளை ஒட்டி அலங்கரிக்கப்பட்ட உருவப்படத்திற்கு திருவண்ணாமலை வடக்கு மாவட்ட செயலாளரும் அதிமுக எம்எல்ஏவுமான முக்கூர் என். சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் பொதுமக்களுக்கு இனிப்பு லட்டு வழங்கினார். உடன் நகர செயலாளர் கே.வெங்கடேசன் ஒன்றிய செயலாளர்கள் அரங்கநாதன், மகேந்திரன், துரை, சிவராஜ் மற்றும் அதிமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

தேனி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 18.09.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் நடைபெறவுள்ளது.

தேனி மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் அந்தந்த வட்டாரத்தில் உள்ள வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை திட்டங்கள் குறித்த கோரிக்கைகளை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் மனுக்களாக வழங்கலாம்.

விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள், சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி அதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

# வாலாஜாபேட்டையில் அண்ணா பிறந்த நாள் அதிமுக சார்பில் மரியாதை மாவட்ட செயளாலர் சுமைதாங்கி ஏழுமலை பங்கேற்பு

இராணிப்பேட்டை,செப்.16

இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டையில் பேரறிஞர் அண்ணாவின் 118 ஆவது பிறந்த நாள் நகர கழக அதிமுக சார்பில் நகர செயலாளர் டபுள்யூ.ஜி. மோகன் தலைமையில் கொண்டாடப்பட்டது இதில் சிறப்பு அழைப்பாளராக, அதிமுக மேற்கு மாவட்டச் செயலாளர் சுமைதாங்கி ஏழுமலை கலந்து கொண்டு எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து பேரறிஞர் அண்ணாவின்திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது இதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு அதிமுகவினர் இனிப்புகள் வழங்கினர்.

நிகழ்ச்சியில் அதிமுகவைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள், மாவட்ட, நகரக் கழக,ஒன்றிய,நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்











# ஆரணியில் தமிழக முன்னாள் முதல்வர் அண்ணா பிறந்தநாள் விழா அதிமுகவினர் கொண்டாட்டம்

ஆரணி:செப்.16

ஆரணியில் தமிழக முன்னாள் முதல்வர் அண்ணா பிறந்தநாள் விழா அதிமுகவினர் கொண்டாட்டம்

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் அதிமுக சார்பில் தமிழக முன்னாள் முதலமைச்சர் அண்ணாவின் 118 வது பிறந்தநாளை முன்னிட்டு ஆரணி அண்ணா சிலை அருகில் மாவட்ட அவை தலைவர் கோவிந்தராஜன் தலைமையில் சிறப்பு அழைப்பாளராக தமிழக முன்னாள் அமைச்சரும் ஆரணி சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான சேவூர்.ராமச்சந்திரன் பங்கேற்று அண்ணாவின் திருவுரு சிலைக்கு மாலை அணிவித்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். பின்னர் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் உள்ள அண்ணாவின் திருவுருவ சிலைக்கு நகர மன்றத் துணைத் தலைவர் பாரிபாபு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் சேவூர் சம்பத் ஒன்றிய செயலாளர்கள் வழக்கறிஞர் சங்கர் ஜெயபிரகாஷ் மாவட்ட இளைஞரணி செயலாளர் ஆனந்த் நகர இளைஞரணி செயலாளர் குமரன் நகர மன்ற உறுப்பினர்கள் விநாயகம் சிவகுமார் நிர்வாகி பாரதிராஜா ஜெயக்குமார் உமாபதி உட்பட அதிமுக கழக நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திருவத்திபுரம் நகராட்சி அதிரடி:

# 8 கடைகளில் 250 கிலோ தடை பிளாஸ்டிக் பறிமுதல்; ரூ.19,500 அபராதம்

திருவத்திபுரம்,செப்.16

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும்பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு மற்றும் விற்பனையை தடுக்கும் வகையில், திருவத்திபுரம் நகராட்சி சார்பில் தீவிர சோதனை நடத்தப்பட்டது.




நகராட்சி ஆணையாளர் எஸ். ஆண்ரூஸ் தலைமையில் நடைபெற்ற இந்த சோதனையில், நகராட்சி பகுதிகளில் உள்ள பேன்சி கடைகள், குடோன் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் விதிகளை மீறி தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை விற்பனைக்காகவும், இருப்பு வைத்திருந்ததும் கண்டறியப்பட்டது. இதையடுத்து 8 கடைகள் மற்றும் நிறுவனங்களில் இருந்து சுமார் ரூ.30 ஆயிரம்மதிப்பிலான250கிலோ தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், விதிகளை மீறிய நிறுவனங்களிடம் இருந்து மொத்தம் ரூ.19,500 அபராதமாக வசூலிக்கப்பட்டது.

திருவத்திபுரம் நகராட்சி பகுதியில் தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களின் விற்பனை மற்றும் பயன்பாட்டை முற்றிலும் தடுக்க தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என நகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது. விதிகளை மீறி பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்வோர் மற்றும் பயன்படுத்துவோர் மீது தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்த சோதனையின்போது துப்புரவு ஆய்வாளர் கே. மதனராசன், நகராட்சி அலுவலக பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் உடனிருந்தனர்.

# சின்னமனூர் நகராட்சியின் 13வது வார்டில் வீடுகள்தோறும் குப்பைகளை 4 வகைகளாக பிரிக்க விழிப்புணர்வு

தேனி மாவட்டம் சின்னமனூர் நகராட்சியை தூய்மையாகவும் சுகாதாரமாகவும் பராமரிக்கும் நோக்கில், தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



இதன் ஒரு பகுதியாக, சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட 13வது வார்டு பகுதியில்உள்ளஅனைத்து வீடுகளுக்கும் நகராட்சி சுகாதார ஆய்வாளர் மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் பரப்புரையாளர்கள் நேரில் சென்று பொதுமக்களுக்கு நேரடி விழிப்புணர்வு வழங்கினர்.

அப்போது, வீடுகளில் நாள்தோறும் சேகரமாகும் கழிவுகளை மட்கும் குப்பை, மட்காத குப்பை, பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் மருத்துவக் கழிவுகள் என 4 வகைகளாக தனித்தனியாக தரம் பிரித்து தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

குப்பைகளை தொடக்கத்திலேயே தரம் பிரித்து கொடுப்பதன் மூலம் அதை மறுசுழற்சி செய்வதற்கும், நகரில் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதை தடுப்பதற்கும் பேருதவியாக இருக்கும் என அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். மேலும், நகராட்சியை தூய்மையாக வைத்துக் கொள்ள பொதுமக்கள் அனைவரும் இந்தத் தரம் பிரிக்கும் நடைமுறைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியராக முகமதுகனி என்பவர் பொறுப்பேற்றுக் கொண்டார்.

# வெளிநாட்டில் முதுகலை படிப்பு: முஸ்லிம் மாணவர்களுக்கு ரூ.36 லட்சம் கல்வி உதவித்தொகை

திருவண்ணாமலை, செப். 16



தமிழ்நாடு அரசுசார்பில் 2026–2027ம் கல்வியாண்டில் வெளிநாட்டில் முதுகலைப் படிப்பு பயிலும் முஸ்லிம் சிறுபான்மை யின மாணவ–மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட உள்ளது. இதன்படி, தலா அதிகபட்சம் ரூ.36 லட்சம் வீதம் 10 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் மாணவ–மாணவியர்கள், 2026–2027ம் கல்வியாண்டில் முதுகலைப் பட்டப்படிப்பில் சேருவதற்காக உலகளாவிய QS (குவாக்க ரெல்லி சைமண்டஸ்) தரவரிசையில் முதல் 250 இடங்களுக்குள் உள்ள பல்கலைக்கழகங்கள் அல்லது கல்வி நிறுவனங்களில் இருந்து நிபந்தனையற்ற சேர்க்கை கடிதம் *(Unconditional Offer Letter)* பெற்றிருக்க வேண்டும்.

மேலும், விண்ணப்பதாரர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.8 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும். இளநிலைப் பட்டப்படிப்பில் குறைந்தபட்சம் 60 சதவீத மதிப்பெண்கள் அல்லது அதற்கு இணையான தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மருத்துவம், பொறியியல், மேலாண்மை, அறிவியல், வணிகவியல் மற்றும் நிதி, மனிதநேயம் மற்றும் கலை, வேளாண்மை அறிவியல், சுகாதாரம் மற்றும் பயன்பாட்டு அறிவியல், சர்வதேச வணிகம், பொருளாதாரம், நிதி மற்றும் கணக்கியல், சமூக அறிவியல், நுண்கலைகள், சட்டம் உள்ளிட்ட பாடப்பிரிவுகளில் முதுகலைப் படிப்பில் சேர்க்கை பெற்றவர்கள் இத்திட்டத்தின் கீழ் விண்ணபிக்கலாம். தகுதியுள்ள மாணவ–மாணவியர்கள் *www.bcmbcmw.tn.gov.in/welfschemes/minorities.htm* என்ற இணையதளத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து, அதை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் ஆணையர், சிறுபான்மையினர் நலத் துறை, கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை–600 005 என்றமுகவரிக்குஅனுப்ப வேண்டும்.

விண்ணப்பங்களை 15.10.2026க்குள் அனுப்ப வேண்டும். தகுதியுள்ள முஸ்லிம் சிறுபான்மை யின மாணவ–மாணவியர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆய, அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது, தமிழ்நாட்டைச் சேர்ந்த பௌத்தர்கள் நாக்பூர் தீக்ஷா பூமியில் விஜயதசமி அன்று நடைபெறும் தம்ம சக்கர பரிவர்தன திருவிழாவிற்கு புனித பயணம் மேற்கொண்டு திரும்பியவர்களுக்கு நபர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.5000/ வரை மானியம் வழங்கும் திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்படுகிறது.**

**இத்திட்டத்தின் கீழ் 2026ஆம் ஆண்டு பயணம் மேற்கொண்டு பயன்பெற விரும்பும் பௌத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.**

**இதற்கான விண்ணப்ப படிவங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் 1500 அலுவலகத்தில் கட்டணமின்றி பெறலாம். மேலும் www.bcmbcmw.tn.gov.in என்ற இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.**

**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலச மஹால் பாரம்பரிய கட்டடம். முதல் தளம், சேப்பாக்கம் சென்னை600 005 என்ற முகவரியில் உரிய ஆவணங்களுடன் 15.11.2026க்குள் விண்ணப்பித்து பயன்பெறலாம் மாவட்ட மரு.இரா. வைத்திநாதன். இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார். ஆட்சித்தலைவர்**



# நெமிலி கிழக்கு ஒன்றிய தி.மு.க மற்றும் நெமிலி பேரூர் தி.மு.க சார்பில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 118 வது பிறந்தநாள் விழா

இராணிப்பேட்டை, செப்.16

இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி கிழக்கு ஒன்றிய தி.மு.க மற்றும் நெமிலி பேரூர் தி.மு.கழகம் சார்பில், உலக அரசியலில் வியக்கத்தக்கதோர் அதிசய மாமேதை தமிழ்த்தாயின் தலைமகன் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 118வது பிறந்தநாள் விழா, நெமிலி கிழக்கு ஒன்றிய செயலாளர், நெமிலி ஒன்றிய பெருந்தலைவர், வடிவேலு அவர்கள் தலைமையிலும், நெமிலி பேரூர் கழக செயலாளர் ஜனார்த்தனன் அவர்கள் முன்னிலையிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

பிறந்தநாள் விழா நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, நெமிலி அண்ணா சாலையில் அமைதி ஊர்வலமாகச் சென்று, நெமிலி பேருந்து நிலையத்தில் உள்ள பேறறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர் அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த, பேரறிஞர் அண்ணா அவர்களின் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். அதன் பின்னர் பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் சரவணன், நெமிலி கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள், ஒன்றிய துணைச் செயலாளர் முகமது அப்துல் ரகுமான், பாண்டியன், பாரதி ஜெயச்சந்திரன், மாவட்ட பிரதிநிதி அரிகிருஷ்ணன், நெமிலி பேரூர் நிர்வாகிகள் சேகர், கோபி, ஹரிஷ் உள்ளிட்ட நிர்வாகிகளும், கழக உடன்பிறப்புகளும், பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு, பிறந்தநாள் விழாவினை சிறப்பி த்தனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சிறுபான்மையினர்களுக்கு சுய வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஈட்டுதலுக்கான செயல்பாடுகளுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் தனிநபர் கடன், சுய உதவி குழுக்களுக்கான சிறுதொழில் கடன், விராசாத் (கைவினை கலைஞர்களுக்கான கடன் திட்டம்) மற்றும் கல்விக் கடன் ஆகிய கடன் திட்டங்கள் வழங்கப்பட்டுவருகிறது. மேற்கண்ட கடன் திட்டத்தின் கீழ் பயன் பெற குடும்ப ஆண்டு வருமானம் கிராம / நகர்ப்புறங்களில் ரூ.3,00,000/க்கும் மிகாமல் இருக்க வேண்டும்.

டாம்கோ கடன் திட்டங்கள் தொடர்பான லோன் மேளாவானது வட்டம் வாரியாக 17.09.2026 அன்று ஆண்டிபட்டி, பெரியகுளம் வட்டத்திலும், 18.09.2026 தேனி வட்டத்திலும், 22.09.2026 அன்று உத்தமபாளையம் மற்றும் போடிநாயக்கனூர் வட்டங்களிலும் அந்தந்த வட்டாட்சியர் அலுவலகங்களில் காலை 10.30 மணி முதல் நடைபெறவுள்ள இந்த சிறப்பு முகாமில் கலந்து கொண்டு பயன் அடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

### மாநகராட்சி இணைப்பால் 100 நாள் வேலை பறிபோனது:

# 18 ஊராட்சிகளை மீண்டும் ஊராட்சியாக மாற்றக்கோரி 6வது நாளாக தொடரும் காத்திருப்பு போராட்டம்

திருவண்ணாமலை, செப்.16

திருவண்ணாமலை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 18 ஊராட்சிகளை மீண்டும் ஊராட்சிகளாகவே தொடர வலியுறுத்தியும், கிராம மக்களின் வாழ்வாதாரமாக இருந்து வந்த 100 நாள் வேலை திட்டத்தை உடனடியாக வழங்கக் கோரியும், திருவண்ணாமலை தென்னரசம்பட்டு பகுதியில் பொதுமக்களின் தொடர் காத்திருப்பு போராட்டம் 6வது நாளாக நீடித்து வருகிறது.

திருவண்ணாமலை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள 18 ஊராட்சிகளில் போதிய வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படாத நிலையில், அவை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டதால் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக, கிராமப்புற மக்களுக்கு முக்கிய வாழ்வாதாரமாக இருந்த 100 நாள் வேலை திட்டம் மாநகராட்சி இணைப்புக்குப் பிறகு கிடைக்காததால் ஏராளமான குடும்பங்கள் வருமானம் இழந்து தவித்து வருவதாக அவர்கள் கூறினர். இதுதவிர, வீட்டு வரி மற்றும் குடிநீர் வரி உள்ளிட்ட வரிகள் உயர்ந்துள்ளதால் பொது மக்களுக்கு கூடுதல் பொருளாதார சுமை ஏற்பட்டுள்ளதாகவும் குற்றம்சாட்டினர்.



கிராமங்கள் போதிய அடிப்படை வசதிகளுடன் வளர்ச்சியடைந்த பின்னர் மாநகராட்சியாக மாற்றுவதற்கு பதிலாக, வளர்ச்சி எட்டாத நிலையிலேயே மாநகராட்சியுடன் இணைத்து அதிக வரி வசூலிப்பது ஏன் எனவும் போராட்டக்காரர்கள் கேள்வி எழுப்பினர்.

மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இந்த கிராமங்களில் எந்த அளவுக்கு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதை தமிழக அரசு விளக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

திருவண்ணாமலையில் விவசாயம் மற்றும் 100 நாள் வேலை உள்ளிட்ட கிராமப்புற வாழ்வாதாரத்தை நம்பியுள்ள மக்களுக்கு மாற்று வேலை வாய்ப்புகள் இல்லாததால் மாநகராட்சி இணைப்பு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்த பிரச்சினைகளை தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில், கடந்த ஆகஸ்ட் 11ந் தேதி திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்ற கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாகவும் போராட்டக்குழுவினர் தெரிவித்தனர்.

இதற்கிடையில், மாநகராட்சி நிர்வாகத்தின் சார்பில் கிராமங்களில் உள்ள மக்களுக்கு அட்டைகள் வழங்கப்பட்டு வேலை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால் இதுவரை முறையாக வேலை வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் கூறினர்.

இதனால், 18 ஊராட்சிகளையும் மாநகராட்சியுடன் இணைத்த உத்தரவை தமிழக அரசு உடனடியாக திரும்பப் பெற்று, அவற்றை மீண்டும் ஊராட்சிகளாகவே செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு உடனடியாக 100 நாள் வேலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தென்னரசம்பட்டு பகுதியில் தொடர் காத்திருப்பு போராட்டம் நடைபெற்று வருகிறது.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்றும், தமிழக அரசு உடனடியாக தலையிட்டு கிராம மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்றும் போராட்டக்குழுவினர் தெரிவித்தனர்.

தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும்
தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில்
சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779



# ஸ்ரீ கன்னியம்மன் ஆலயத்தில் 48வது நாள் மண்டல அபிஷேகம்

இராணிப்பேட்டை மாவட்டம் நவலாக் புளியங்கண்ணு கிராமத்தில் ஸ்ரீ கன்னியம்மன் ஆலயத்தின் 48வது நாள் மண்டல அபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த ஆலயம் புதுப்பிக்கப்பட்டு, கடந்த ஜூலை 29ஆம் தேதி மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, 48வது நாள் மண்டல அபிஷேக விழா நடைபெற்றது. இதையொட்டி காப்பு கட்டி விரதம் இருந்த பக்தர்கள் மற்றும் கிராம மக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். மேலும் பக்தர்கள் கலசங்களில் புனித தீர்த்தத்தை தலையில் சுமந்தபடி, மங்கள வாத்தியங்கள் முழங்க ஆலயத்தை வலம் வந்தனர். தொடர்ந்து வேத மந்திரங்கள் முழங்க, ஸ்ரீ கன்னியம்மன் உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கு புனித நீர் ஊற்றி சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்து அருள் பெற்றனர். விழாவின் நிறைவாக, கோவில் நிர்வாகம் சார்பில் பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

### பிரசவ வார்டில் அடிப்படை வசதிகள் இல்லை; குடிநீர் வீணாகும் அவலம்:

# திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கர்ப்பிணிகளின் உறவினர்கள் பரபரப்பு குற்றச்சாட்டு

திருவண்ணாமலை, செப். 16

திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரசவத்திற்காக வரும் கர்ப்பிணி பெண்களுக்கும், அவர்களுடன் வரும் உறவினர்களுக்கும் போதிய அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை என்றும், மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் தனியார் பாதுகாவலர்கள் பணம் கேட்பதாகவும் கர்ப்பிணிகளின் கணவன்மார்கள் மற்றும் உறவினர்கள் பரபரப்பு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.

திருவண்ணாமலை மாநகரின் புறவழிச் சாலையில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைந்துள்ளது. திருவண்ணாமலை மட்டுமின்றி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இந்த மருத்துவமனையை சிகிச்சைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

மருத்துவமனை வளாகத்தில் புறநோயாளிகள் பிரிவு, தாய்சேய் நலப்பிரிவு, ரத்த வங்கி, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, உள்நோயாளிகள் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளுக்கான கட்டடங்கள் செயல்பட்டு வருகின்றன.

தினந்தோறும் ஏராளமான நோயாளிகள் மற்றும் கர்ப்பிணிகள் சிகிச்சைக்காக வந்து செல்லும் நிலையில், அவர்களுடன் வரும் உறவினர்களுக்கு போதிய காத்திருப்பு மற்றும் ஓய்விட வசதிகள் இல்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

குறிப்பாக, ஒருங்கிணைந்த மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்படும் கர்ப்பிணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக அவர்களின் கணவன்மார்கள் தெரிவித்தனர். பிரசவத்திற்குப் பிறகு தாயையும் பச்சிளம் குழந்தையையும் தங்க வைப்பதற்கான படுக்கை வசதிகள் போதுமானதாக இல்லை என்றும், சில நேரங்களில் தரையில் படுக்க வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் அவர்கள் வேதனை தெரிவித்தனர்.

மேலும், மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் உதவியாளர்களுக்கு தனியாக காத்திருக்கவோ, உணவு அருந்தவோ போதிய இடவசதி இல்லை என்றும் கூறப்படுகிறது.

இதனால் மருத்துவமனை வளாகத்தில் கிடைக்கும் இடங்களில் உடைமைகளை வைத்துக் கொண்டு அமருவதுடன், மரத்தடிகளில் அமர்ந்து உணவு உண்ணும் நிலையும் காணப்படுவதாக உறவினர்கள் தெரிவித்தனர். குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளும் போதுமானதாக இல்லை என அவர்கள் குற்றம் சாட்டினர். குடிநீருக்காகவும், கழிப்பறை பயன்பாட்டிற்காகவும் பணம் செலுத்த வேண்டிய சூழல் இருப்பதாகவும், சில நேரங்களில் வெளியே பணம்கொடுத்து குடிநீர் வாங்க வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் தெரிவித்தனர்.

இதனிடையே, மருத்துவமனை வளாகத்தில் குடிநீர் மற்றும் கழிப்பறை பயன்பாட்டுக்கு தண்ணீர் கிடைக்காமல் நோயாளிகள் மற்றும் உறவினர்கள் அவதிப்பட்டு வரும் நிலையில், மறுபுறம் மருத்துவமனை வளாகத்தில் குடிநீர் வீணாக வெளியேறியதாக கூறப்படும் காட்சி அங்கிருந்தவர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.



மேலும், பிரசவ வார்டில் பல்வேறு பணிகளுக்காக ரூ.500 முதல் ரூ.1,000 வரை பணம் கேட்கப்படுவதாகவும், மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் தனியார் பாதுகாவலர்கள் நோயாளிகள் மற்றும் உறவினர்களிடம் பணம் கேட்பதாகவும் சிலர் குற்றம் சாட்டினர்.

இந்த குற்றச்சாட்டுகள் குறித்து உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

இதுகுறித்து கர்ப்பிணிகளின் கணவன்மார்கள் மணிசெல்வம் (கீழ்பென்னாத்தூர்), முகிலன் (செங்கம்) ஆகியோர் கூறுகையில், “அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை நம்பி தினந்தோறும் ஏராளமான கர்ப்பிணிகள் வருகின்றனர். ஆனால், அவர்களுக்கும் உடன் வரும் உறவினர்களுக்கும் தேவையான குடிநீர், கழிப்பிடம், தங்குமிடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லை. மழை, வெயில் என எந்த சூழ்நிலையிலும் மருத்துவமனை வளாகத்திலேயே காத்திருக்க வேண்டியுள்ளது. இரவு நேரங்களில் கொசுக்கடியில் அவதிப்பட வேண்டியுள்ளது. கர்ப்பிணிகளுக்கு போதிய படுக்கை வசதிகளை ஏற்படுத்துவதுடன், உறவினர்களுக்காக தனி காத்திருப்பு அறை மற்றும் ஓய்விட வசதிகளை ஏற்படுத்த வேண்டும். குறைந்த விலையில் உணவு கிடைக்கும் வகையில் கேண்டீன் வசதியும் ஏற்படுத்த வேண்டும். பணம் கேட்பதாக கூறப்படும் புகார்கள் குறித்தும் அதிகாரிகள் உரிய விசாரணை நடத்த வேண்டும்” என்றனர்.

இந்த நிலையில், செய்தி சேகரிப்பதற்காக சென்ற செய்தியாளர்களை மருத்துவமனை நிர்வாகத்தினர் தடுத்து நிறுத்தியதாகவும், இதனால் அங்கு சிறிது நேரம் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. பின்னர் மருத்துவக் கல்லூரி முதல்வரை செய்தியாளர்கள் சந்தித்தபோது, மருத்துவமனை தொடர்பான செய்திகளை சேகரிக்க முறையான அனுமதி பெற்று வர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து மருத்துவக் கல்லூரி முதல்வர் கூறுகையில், திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நாளொன்றுக்கு 40க்கும் மேற்பட்ட பிரசவங்கள் நடைபெற்று வருவதாகவும், மாதத்திற்கு 1,500க்கும் மேற்பட்ட பிரசவங்கள் நடைபெறுவதாகவும் தெரிவித்தார்.

திருவண்ணாமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கர்ப்பிணிகள் அரசு மருத்துவமனையை நம்பி சிகிச்சைக்காக வருவதால், தற்போதுள்ள கட்டட வசதிகள் போதுமானதாக இல்லை என்றும் அவர் கூறினார்.

கர்ப்பிணி தாய்மார்களின் தேவையை கருத்தில் கொண்டு கூடுதல் கட்டடம் கட்டுவதற்காக தமிழக அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும், கூடுதல் கட்டட வசதி கிடைத்தவுடன் தற்போதுள்ள பல்வேறு சிரமங்களுக்கு தீர்வு காணப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் அவர்களுடன் வரும் உறவினர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதுடன், குடிநீர், கழிப்பிடம், காத்திருப்பு மற்றும் ஓய்விட வசதிகளை உடனடியாக ஏற்படுத்த மாவட்ட நிர்வாகமும் மருத்துவமனை நிர்வாகமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.



# “தமிழகத்தில் மின்வெட்டு உள்ளது உண்மைதான்” திருமாவளவன்

“தமிழகத்தில் மின்வெட்டு உள்ளது என்பது உண்மைதான். அரசு இதில் கூடுதல் கவனம் செலுத்தி, அதனை சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்” என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், “ஆ.ராசா, சேகர்பாபு மீது வழக்குகள் போடப்பட்டிருக்கிறது. அரசியல் ரீதியாக, கொள்கை ரீதியாக விமர்சிப்பதைத் தாண்டி, தனிநபர் ரீதியாக ஒருமையில் விமர்சித்தார் என்பது அதிர்ச்சியளிக்கிறது.

திமுக நீண்ட நெடிய பாரம்பரியமுள்ள இயக்கம். தற்போது ஆர்ப்பாட்ட மேடைகளில் அவர்கள் பேசிய பேச்சு பொதுமக்கள் முகம் சுழிக்கும் வகையில் அமைந்திருந்தது என்பதை மறுக்க முடியாது.

பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பான அரசின் நிலைப்பாட்டில் விவசாயிகள் அதிருப்தியில் உள்ளனர்.

இதனை முதல்வர் விஜய்யின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளேன். தமிழகத்தில் மின்வெட்டு உள்ளது என்பது உண்மைதான்.

அரசு இதில் கூடுதல் கவனம் செலுத்தி, அதனை சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மின்வெட்டு தொடர்பாக அதிகாரிகள் சொல்லும் தகவல்களை கொண்டுதான் அமைச்சர்கள் பதில் சொல்கின்றனர்.

அதிகாரிகள் முறையான, சரியான தகவல்களை அமைச்சர்களுக்கு தரவேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

தமிழகம் மட்டுமல்ல இந்தியா முழுவதும் இடைத்தேர்தல்களில் பணத்தை கொட்டி இறைக்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

வாக்குகளை விலைக்கு வாங்குவது அண்மைக்காலமாக அதிரிகரித்துள்ளது.

வரவுள்ள இடைத்தேர்தலில் அவ்வாறு நடைபெறக் கூடாது. தேர்தல் ஆணையம் இதனை தடுத்து நிறுத்த வேண்டும்.

தவெக கொடியின் வண்ணத்தில் அரசுப் பேருந்துகளில் வண்ணம் தீட்டுவது என்பது ஏற்புடையது அல்ல. எந்தக் கட்சியும் அரசாங்கத்தில் அந்த வண்ணத்தை பூசக் கூடாது” என்றார்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA